**Judicial Form No. 53**

(Sec Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

.IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, KRISHNAGIRI

| | | |
|---|---|---|
| Calendar .. .. | | |
| Miscellaneous .. .. | | |
| Preliminary Register .. .. | | CC.No. 314/2022 |
| Deposition of witness for | | Prosecution PW 5 |

| | |
|---|---|
| Name | : ராஜா |
| Fathers Name / Husband | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act X of 1969 (Central Act 44 of 1969 on the day 22th of April - 2024.

(A1 present. A2 to A4 Absent. PFA. )

அரசு தரப்பில் முதல் விசாரணை:

நான் தற்போது பையூரில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். 14.10.2021ம் தேதி வரட்டனம்பட்டி பூநகர் ராமன் ஓட்டு வீட்டு அருகில் போலிசார் வந்து விசாரித்தார்கள். அப்போது சண்டை நடந்ததை நான் பார்த்ததாக சொன்னேன். அதற்காக என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். என்னுடன் மிலிட்டிரிகாரர் ஒருவரும் கையெழுத்து போட்டார். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 1 வது கையெழுத்து என்னுடையதுதான். மேற்படி பார்வை மகசரிலுள்ள 1 வதை கையெழுத்து அ.சா.ஆ.2 ஆக குறியிடு செய்யப்படுகிறது. என்னை போலிசார் விசாரித்தார்கள். என்னை போலிசார் விசாரித்தார்கள்.

அரசுதரப்பில் சாட்சி பிறழ்சாட்சியாக அனுமதிக்க வேண்டியதன் பேரில் நீதிமன்றம் அனுமதித்து அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

அரசு  தரப்பில் குறுக்கு விசாரணை:

கடந்த 19.10.2021 அன்று காலை 8 மணிக்கு பூநகர் கிராமத்தை சேர்ந்த ராமசாமியுடன் எனது அக்கா ராணி வீட்டிடன் நின்றிருந்தபோது காவல் உதவி ஆய்வாளர் சம்பவம் தொடர்பாக சம்பவ இடத்தை பார்வையிட்டும் வரைபடம் வரைந்து மகசர் தயார் செய்து என்னிடமும், ராமசாமி என்பவரிடமும் கையெழுத்து வாங்கினார்கள் என்றாலும் தற்போது நீதிமன்றத்தில் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, படம் வரைந்து விட்டு சம்பவம் குறித்து விசாரித்து கையெழுத்து வாங்கினார்கள்.

எதிரிகள்  தரப்பில் குறுக்கு விசாரணை:

எனது சொந்தஊர் பையூர் என்றால் சரிதான். ராணி எனது அக்கா. எனது அக்கா கேட்டுக் கொண்டதால் சம்பவத்தை பார்த்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் காவல் நிலைய்ததில் வைத்து கையெழுத்து போட்டேன் என்றால் சரியல்ல. சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றாலும் எனது அக்கா கேட்டுக்கொண்டதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

K KARTHICK ASATH

Judicial Magistrate No 1
Digitally signed by K KARTHICK ASATH
Location: Krishnagiri